


22.07.2024

தலைப்புச் செய்திகள்

1. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி பாகுபாடின்றி அடுத்த நான்கரை ஆண்டுகள் தேச நலனிற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

2. நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதம் நடப்பு நிதியாண்டில் 6.5 முதல் 7 சதவிகிதமாக இருக்கும் என்று பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. நீட் தேர்வில் கடந்த 7 ஆண்டுகளில் முறைகேடுகள் நடைபெற்றதற்கான ஆதாரம் எதுவும் இல்லை என்று மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் மக்களவையில் தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாட்டில் முதன்முறையாக ஆன்லைன் மூலமான கட்டட அனுமதி திட்டத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

5. பொறியியல் மாணாக்கர் சேர்க்கையில் சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு தமிழகத்தில் இன்று தொடங்கியது.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பிரதமர்

மக்களவையில் நாளை தாக்கல் செய்யப்பட உள்ள பட்ஜெட் அடுத்த ஐந்தாண்டுகளுக்கான பாதையை நிர்ணயிக்க உள்ளதால் சுதந்திர நூற்றாண்டின் இன்றியமையா நிதிநிலை அறிக்கையாக இது திகழும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்திருக்கிறார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர், மக்களவை தேர்தல் முடிவடைந்த நிலையில், மக்களின் தீர்ப்பை ஏற்று அனைத்து அரசியல் கட்சியினரும் நாட்டின் நலன் கருதி அடுத்த ஐந்தாண்டுகள் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

எதிர்கட்சிகள் தங்களது தோல்வியை மறைத்துக்கொள்ள நாடாளுமன்ற நேரத்தை வீணடித்து எதிர்மறையான அரசியலில் ஈடுபடுவதாக பிரதமர் குற்றம் சாட்டினார்.

மக்களுக்கு தாம் அளித்த உத்தரவாதத்தை செயல்படுத்தும் வகையில் தமது அரசு முன்னோக்கி செல்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கட்சி பாகுபாடின்றி அனைத்து அரசியல் கட்சியினரும் அடுத்த நான்கரை ஆண்டுகள் தேச நலனிற்காக தங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

விவசாயிகள், இளைஞர்களின் ஆளுமை மற்றும் நாட்டின் வளர்ச்சிக்காக 2029 ஆம் ஆண்டு தேர்தல் காலம் வரை அனைத்து அரசியல் கட்சியினரும் பணியாற்ற வேண்டும் என்று பிரதமர் கேட்டுக்கொண்டார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

தர்மேந்திரபிரதான்

நீட் இளநிலை மருத்துவ நுழைவு தேர்வில் கடந்த 7 ஆண்டுகளில் முறைகேடுகள் நடைபெற்றதற்கான ஆதாரம் எதுவும் இல்லை என்று மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர் இதுதொடர்பாக அரசு எதையும் மறைக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

தேசிய தேர்வு முகமை இதுவரை 240 தேர்வுகளை நடத்தியுள்ளதாகவும்,

நான்கரை கோடிக்கும் மேற்பட்ட மாணாக்கர் இந்த தேர்வை எழுதி உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் தேர்வு முறை தொடர்பாக எதிர்கட்சி தலைவர் திரு.ராகுல்காந்தியின் கருத்துக்களுக்கு அமைச்சர் கண்டனம் தெரிவித்தார்.

தேர்வுகளில் வினாத்தாள் கசிவு நாட்டில் பரவலாக இடம்பெறுவதாக எதிர்கட்சிகள் கூறும் குற்றச்சாட்டை மறுத்த அவர் பீகார் மாநிலம் பாட்னா அருகே ஒரே ஒரு இடத்தில் மட்டுமே முறைகேடுகள் இடம்பெற்றதாக தெரிகிறது என்றும் குறிப்பிட்டார்.

மத்திய புலனாய்வு துறை இதுகுறித்து விசாரித்து வருவதாகவும் உச்சநீதிமன்றத்தின் விசாரணையின் கீழ் இப்பிரச்சனை தற்போது உள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

முன்னதாக மக்களவையில் இப்பிரச்சனையை எழுப்பிய எதிர்கட்சி தலைவர் திரு.ராகுல் காந்தி நாட்டின் தேர்வு முறையில் பிரச்சனை உள்ளதாக குறிப்பிட்டார்.

தேர்வு குறித்தும், தங்களது எதிர்காலம் குறித்தும் லட்சக்கணக்கான மாணாக்கர் கவலையில் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

சமாஜ்வாடி கட்சி தலைவர் திரு.அகிலேஷ் யாதவ் பேசுகையில் நீட் தேர்வு பிரச்சனையில் மத்திய கல்வி அமைச்சர் பதவி விலக வேண்டும் என்று கோரினார்.

சுஎளீ உறுப்பினர் என்.கே. பிரேமசந்திரனும் வினாத்தாள் கசிவு குறித்து கேள்வி எழுப்பினார்.

இதுதொடர்பான கல்வி அமைச்சரின் பதிலில் திருப்தி அடையாத எதிர்கட்சியினர் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

மாநிலங்களவை இன்று கூடியதும் அவைத்தலைவர் திரு.ஜக்தீப் தன்கர் உறுப்பினர்கள் விவாதங்களின் போது அவை மாண்புகளை கடைபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மக்களின் நலனுக்காக உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து செயலாற்றவும் அவர் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து நீட் தேர்வு குறித்து காங்கிரஸ், இடதுசாரி, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சி உறுப்பினர்கள் வழங்கிய ஒத்திவைப்பு நோட்டிசை அவைத்தலைவர் நிராகரித்தார்.

ழூழூழூழூழூழூழூழூழூழூழூழூ

பொருளாதார ஆய்வறிக்கை

2023-24 ஆம் நிதியாண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் நடப்பு நிதியாண்டில் உள்நாட்டு வளர்ச்சி விகிதம் 6.5 முதல் 7 சதவிகிதம் வரை வளர்ச்சி பெறும் என கணிக்கப்பட்டுள்ளது.

பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் நாளான இன்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மக்களவையில் தாக்கல் செய்த பொருளாதார ஆய்வறிக்கையில், உலகளாவிய பொருளாதார தேக்க நிலையிலும், உள்நாட்டு

வளர்ச்சி காரணமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

வர்த்தகம் மற்றும் சேவை பிரிவு ஏற்றுமதிகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் இந்த ஆய்வறிக்கையில் இடம்பெற்றுள்ளதோடு, தென்மேற்கு பருவமழை இயல்பாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் வேளாண் பிரிவில் செயல்பாடு அதிகரிப்பதோடு, ஊரக தேவைகள் சீரமைப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

நிர்மலா சீதாராமன்

கம்பெனி சட்டங்களின் கீழ் 63 குற்றங்களை, குற்றவியல் பட்டியலிலிருந்து நீக்கியதன் மூலம் சந்தை வாய்ப்புகள் பெருகியுள்ளதோடு, இலகுவான வர்த்தகம் நடைபெறுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு பதில் அளித்த மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், தேங்கியிருக்கும் வழக்குகளை குறைப்பதற்காக கார்பரேட் சட்ட அமைச்சகம் இரண்டு சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதாக கூறினார்.

நடப்பாண்டின் ஜுலை மாதம் வரை 6 ஆயிரத்து 294 வழக்குகள் திரும்ப பெறப்பட்டதால் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்ததாகவும் அவர் கூறினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கஜேந்திரசிங் செகாவத்

வேலூர் கோட்டை மற்றும் நினைவுச்சின்னங்களை பாதுகாத்து பராமரிக்க மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக, மத்திய சுற்றுலா, கலாச்சாரத்துறை அமைச்சர் திரு.கஜேந்திரசிங் செகாவத் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அவர், நினைவுச்சின்ன வளாகங்களில் கூட்டங்கள் நடத்த, மாநில அரசுக்கோ, பொதுமக்களுக்கோ தொல்பொருள் ஆய்வுத்துறை எவ்வித கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் முதன்முறையாக கட்டட அனுமதியை ஆன்லைன் மூலம் உடனடியாக வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்தில் இன்று தொடங்கிவைத்தார்.

இதன்படி 2 ஆயிரத்து 500 சதுர அடி மனையில் 3 ஆயிரத்து 500 சதுர அடி வரை கட்டப்பட உள்ள வீடுகளுக்கு உடனடி அனுமதி வழங்கப்படுகிறது.

மேலும் நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் 541 கோடி ரூபாய் மதிப்பில் 4 ஆயிரத்து 184 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை காணொலி மூலம் முதலமைச்சர் இன்று திறந்துவைத்தார்.

வீட்டுவசதி வாரியம் சார்பில் 383 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஆயிரத்து 459 அரசு அலுவலர்களுக்கான வாடகை குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகத்தையும் திறந்துவைத்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

முத்துசாமி

நடுத்தர மக்களின் வீடு கட்டும் கனவை எளிதாக்க புதிய வசதி தொடங்கப்பட்டுள்ளதாக மாநில வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு.முத்துசாமி தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் ஆன்லைன் மூலம் விண்ணப்பதாரர்கள் அளிக்கும் விவரத்தின் அடிப்படையில் கட்டடங்களுக்கு உடனடி அனுமதி வழங்கப்படும் என்றார்.

புதிய திட்டத்தின் படி கட்டிட பணிகள் முடிந்ததும், முடிவு சான்று பெறுவதிலுமிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

பரிசீலனை கட்டணம், கட்டமைப்பு கட்டணங்களிலிருந்து 100 சதவிகிதம் விலக்களிக்கப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கலந்தாய்வு

தமிழ்நாட்டில் நடப்பாண்டு பொறியியல் படிப்பிற்கு விண்ணப்பித்த மாணாக்கரின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.க.பொன்முடி தெரிவித்துள்ளார்.

டீ.நு.இ டீ.வுநஉா உள்ளிட்ட பொறியியல் படிப்பிற்கான ஆன்லைன் கலந்தாய்வை சென்னையில் இன்று தொடங்கிவைத்த பின் செய்தியாளர்களிடம்

பேசிய அவர் சிறப்பு பிரிவினருக்கு 2 கட்டங்களாகவும், பொது பிரிவினருக்கு வரும் 29 ஆம் தேதிமுதல் செப்டம்பர் 11 ஆம் தேதிவரை 3 கட்டங்களாகவும் கலந்தாய்வு நடைபெறும் என்றார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மேட்டூர்

மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று நண்பகல் 76 அடியை தாண்டியுள்ளது.

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கன மழை காரணமாக கர்நாடக அணைகளிலிருந்து காவிரி ஆற்றில் உபரி நீர் அதிக அளவு திறக்கப்பட்டுள்ளதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 69 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் இன்று வினாடிக்கு 75 ஆயிரம் கன அடி நீர் தற்போது வந்துகொண்டிருக்கிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

நிபா வைரஸ்

கேரள மாநிலத்தில் நிபா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் 6 பேர் கொண்ட மத்திய குழு கோழிக்கோடு சென்றடைந்துள்ளது.

அம்மாநில அரசுடன் இணைந்து பொது சுகாதார முன்னெச்சரிக்கை பணிகளில் இக்குழு ஈடுபட உள்ளது.

மேலும் நடமாடும் ஆய்வகத்தையும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகம் கோழிக்கோடிற்கு அனுப்பிவைத்துள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

சேகர்பாபு

சென்னை பெருநகர வளர்ச்சிகுழுமம் சார்பில் 12அரை கோடி ரூபாய் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் ரத்த சுத்திகரிப்பு நிலையத்தை இத்துறைக்கான அமைச்சர் திரு.சேகர்பாபு இன்று நேரில் ஆய்வு செய்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மினி பேருந்து

தமிழ்நாட்டில் தனியார் மினி பேருந்துகளை இயக்குவது தொடர்பான புதிய வரைவு திட்ட அறிக்கை மீது கருத்துக்கேட்பு கூட்டம் இன்று நடைபெறுகிறது.

மாநில உள்துறை செயலர் தலைமையில் சென்னையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பெறப்படும் கருத்துக்களின் அடிப்படையில் திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஆட்சித்தலைவர்கள் பொறுப்பு

ராமநாதபுரம், தஞ்சை, நாகை, மாவட்டங்களில் புதிய மாவட்ட ஆட்சித்தலைவர்கள் இன்று பொறுப்பேற்றுக்கொண்டனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர் கிடைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஆட்சித்தலைவர் சிம்ரன் ஜித் சிங் கூறியுள்ளார்.

தஞ்சை மாவட்டத்தை முன்னோடி மாவட்டமாக முன்னெடுத்துச்செல்ல அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று புதிதாக பொறுப்பேற்ற ஆட்சித்தலைவர் திருமதி பிரியங்கா தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

நாகை மாவட்ட புதிய ஆட்சித்தலைவராக பொறுப்பேற்றுக்கொண்ட திரு.ஆகாஷ், அரசின் நலத்திட்டங்கள் அனைத்தும் மக்களை சென்றடைய ஆவன செய்யப்படும் என்றார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கிரிக்கெட்

இந்திய - இலங்கை அணிகளுக்கிடையிலான முதலாவது 20-20 கிரிக்கெட் போட்டி வரும் சனிக்கிழமை பல்லேகலேயில் நடைபெற உள்ள நிலையில் இதில் பங்கேற்கும் இந்திய அணி வீரர்கள் இலங்கை புறப்பட்டு சென்றுள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு